**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.25/2024** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 2** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | அழகுவேல் | **S/o.(or)W/o. :** | துரைசாமி |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of

**21.02.2025**

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கடலூர் மாவட்டம் திட்டக்குடி வட்டம் வடகரம்பூண்டி கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகள் என் ஊர்க்காரர்கள் தான். அ.சா.1 எனக்கு தெரியும். நல்லதம்பிக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. அ.சா.1 அடிப்பட்டு மருத்துவமனையில் இருந்தது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

எங்கள் ஊர் கிருஷ்ணசாமி உடையார் மகன் நல்லதம்பிக்கும் பெரியசாமி மகன் கல்யாணசுந்தரம் என்பவருக்கும் நிலம் சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது என்றும் நல்லத்தம்பிக்கு ஒரே இடத்தில் 9 ஏக்கர் நிலம், பம்பு செட்டுகள் உள்ளது என்றும் நல்லதம்பி வீட்டிற்கு பக்கத்தில் 16 செண்ட் நிலம் தங்கம்மாள் பெயரில் உள்ளது என்றும் அந்த இடம் சம்பந்தமாக நல்லதம்பிக்கும் கல்யாணசுந்தரத்திற்கும் பிரச்சனை இருந்தது என்றும் அதன்காரணமாக கல்யாணசுந்தரம் நல்லதம்பியை தீர்த்துகட்டிவிடுவதாக பல இடங்களில் சொல்லிவந்தார் என்றும், 22.01.2017ம் தேதி சுமார் 9 மணியளவில் நான் திருவளந்துறை கிராமத்தில் உள்ள எனது வயலுக்கு சென்று கொண்டிருந்தேன் என்றும், அப்போது வெள்ளாற்று வாய்க்கால் மேல்புறம் அருகே சென்றபோது எங்கள் ஊரை சேர்ந்த பெரியசாமி மகன் கல்யாணசுந்தரம் அவரது அண்ணன் சாமிதுரை, சாமிதுரையின் மகன் மாணிக்கம், தங்கராசு மகன் செல்லதுரை, பொன்னுசாமி மகன் அழகுவேல் சாமி ஆளுக்கோர் கட்டையுடன் ஏதோ ஒரு சதித்திட்டத்துடன் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், நான்அவர்களை பார்த்துவிட்டு மாம்பட்டி அய்யனார் கோவில் அருகே சென்று கொண்டிருந்தேன் என்றும், எனக்கு எதிரே கிருஷ்ணசாமி மகன் நல்லதம்பி டிவிஎஸ் மோட்டார் சைக்கிளில் என்னை கடந்து சென்றார் என்றும், ஏதோ நடக்க போகிறது என்று நான் சந்தேகப்பட்டு நின்று பார்த்தபோது நல்லதம்பி திருவாளந்துறை வாய்க்காலில் இறங்கி மோட்டார் சைக்கிளுடன் ஏறியபோது கல்யாணசுந்தரம், சாமிதுரை , மாணிக்கம் மகன் சாமிதுரை, தங்கராசு மகன் செல்லதுரை, பொன்னுசாமி மகன் அழகுவேல்சாமி, ஆகியோர் இந்த தேவடியா மகனை தான்டா அடித்து

கொல்லவேண்டும்என்று சத்தம் போட்டுக்கொண்டு அனைவரும் நல்லதம்பியை அடித்தார்கள் என்றும், நல்லதம்பி வண்டியிடன் கீழே விழுந்தார் என்றும் நான் அருகில் ஓடி அடிக்காதீர்கள் என்று தடுத்த போது என்னையும் அடித்து கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள் என்றும், நான்அப்படியே நின்றுவிட்டேன்என்றும், அப்போது அய்யாசாமி மகன் ராமர் மோட்டார் சைக்கிளில் வயலுக்கு போக வந்தார் என்றும் இவர்கள் அனைவரும் நல்லதம்பியை அடிப்பதை பார்த்து அடிக்காதீர்கள் எதுவாக இருந்தாலும் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள் என்றும் நல்லதம்பி இறந்துவிட்டார் என நினைத்து அவர்கள் அனைவரும் ஓடிவிட்டார்கள் என்றும், பக்கத்து வயலில் வேலைபார்த்துக்கொண்டிருந்த ராமசாமி படையாச்சி மகன் அய்யாதுரை ரெங்கசாமி மகன் வடிவேலும் அங்கு வந்தார்கள் என்றும் வடிவேலு நல்லதம்பி மகன் அய்யாதுரைக்கு தகவல் சொன்னார் என்றும், பின்னர் நல்லதம்பியை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், பின்னர் தான் எதிரிகள் 5 பேரும் நல்லதம்பியை கொலை செய்ய திட்டம் தீட்டயதை தெரிந்து கொண்டேன் என்றும் மங்களமேடு காவல் ஆய்வாளர், என்னை விசாரித்த போது இவ்வாறு கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது சொந்த ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.

<u>மறு விசாரணை</u> இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.